சூரிய
காந்தி
SOORIYA GANDHI

விலை ரூபா 5-00

வினோவின் தரம்
என்றும் நிரந்தரம்

புதிய சிங்கப்பூர் டிசைன் நகைகள்
22 கரட் நகைகள் பெற
நம்பிக்கையான இடம்

வினோ நகைப் பூங்கா

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மலர் 1 வியாழக்கிழமை 12 - 2 - 1998 இதழ் 11

# தமிழ் கட்சிகளிடையே மோதல்

# யாழ். நகரில் பதட்டம் நிலவியது

**யாழ். நகரில் நேற்று மாலை வேம்படி வீதியில் அமைந்துள்ள ரெலிகொம் நிறுவனத்திற்கு முன்னால் ஈ.பி.டி.பி. உறுப்பினர்களுக்கும் புளொட் உறுப்பினர்களுக்கும் இடையே மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.**

இந்த மோதலில் சிலர் காயம் அடைந்தனர். மோட்டார் சைக்கிள்கள் அநாதரவாக தெருவில் கிடந்தன. கைவிட்ட நிலையில் சில செருப்புக்களும் கிடந்தன.

வேம்படி வீதி வழியாக ஈ. பி. டி. பி. உறுப்பினர்கள் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தனர்.

புளொட் உறுப்பினர்கள் தங்கள் அலுவலகத்தில் இருந்தனர். இந்த இரு குழுக்களுக்கும் இடையிலேயே மோதல் வெடித்தது.

இச் செய்தியை எழுதும் வரை இரு குழுவினரையும் சந்தித்து மோதலுக்கான காரணத்தை தெரிந்துகொள்ள முடியவில்லை.

சில மோட்டார் சைக்கிள்கள் ஒரு மணி நேரத்துக்கும் மேலாகவே தெருவில் கிடந்தன.

சில ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் காயங்களுடன் காணப்

(6-ம் பக்கம் பார்க்க)

## பயமும் பீதியும் அடைந்த மக்கள் செய்வதறியாது சிதறி ஓட்டம்

வேம்படி வீதியில் நடைபெற்ற மோதல் சம்பவத்தை அடுத்து வேம்படிவீதியாலும், ஆஸ்பத்திரி வீதியாலும் நடந்தும் சைக்கிளிலும் மோட்டார் சைக்கிளிலும் சென்றுகொண்டிருந்த மக்கள் மிகுந்த பரபரப்படைந்து நாலாபக்கமும் விரைந்து ஓடினார்கள்.

நகரின் மையப்பகுதியில் அமைந்திருந்த கடைகள் அவசரமாக சாத்தப்பட்டன.

யாழ். போதனா வைத்திய சாலையில் நோயாளர்களை பார்வையிட வந்தவர்கள் இரு தரப்பினரிடத்திலும் இருந்த ஆயுதங்களைப்பார்த்து பயமும் பீதியும் அடைந்து செய்வதறியாது திகைத்து நின்றனர்.

பலர் ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறாது நீண்டநேரம் அங்கேயே தரிந்து நின்றனர்.

வைத்தியசாலை ஊழியர்களிடையேயும்ஒருவகையான பரபரப்பையும் பீதியையும் காணக்கூடியதாக இருந்தது.

யாழ் போதனா வைத்திய சாலையில் எண்பதுகளில் ''தாஸ் குழு''வுடன் நடைபெற்ற மோதல்போன்று இதுவும் தொடருமோ என்றபயம் எல்லோரது எண்ணங்களிலும் ஏற்பட்டது.

## துணைவேந்தருடன் அமைச்சர் சந்திப்பு

இலங்கையிலுள்ள பதினொரு பல்கலைக்கழகங்களினதும் துணைவேந்தர்களுடன் கல்வி உயர்கல்வி அமைச்சர் ரிச்சட்பத்திரண நேற்று உயர்மட்ட மகாநாடு ஒன்றை நடாத்தி உள்ளார்

கல்வி. உயர்கல்வி அமைச்சு செயலகத்தில் நடைபெற்ற இம் மாநாட்டில் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை கலந்துகொண்டுள்ளார்

புதிய கல்வித்திட்டம், மற்றும் பல்கலைக்கழக அபிவிருத்தி தொடர்பாக பல்கலைக்கழக துணைவேந்தர்களுடன் அமைச்சர் ஆலோசனை நடத்தி உள்ளார்

## இனவாத சக்திகளை அரசு உடன் தடைசெய்ய வேண்டும்

இனவாதத்தினை தூண்டும் சகல அரசியற் கட்சிகளையும், ஸ்தாபனங்களையும் அரசாங்கம் தடைசெய்ய வேண்டும் என மாத்தளை மாவட்ட ஒருங்கிணைந்த பௌத்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது

இவ்வாணைக் குழுவின் தலைவர் சங்கைக்குரிய இவைமுக சுமங்கல தேரோ மேலும் தெரிவிக்கையில் இனங்கள், சாதிகள், சமயங்களின் பெயரில் கட்சிகள் பதிவுசெய்யப்படுவதைத் தடைசெய்ய வேண்டும் எனவும் ஒவ்வொரு இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பல கட்சிகள் இப்போது தோன்றி உள்ளன. இவை இனவாதத்தினை இந் நாட்டில் தூண்டுவதற்கு துணைபோவதாகவும் இக் குழுக்கள் நாட்டில் பயங்கரவாதத்தினை தூண்டுவதற்கு வழிவகுக்கும் எனவும், அதிகார ஆசை பிடித்த அரசியல்வாதிகள் தமிழ், சிங்கள, முஸ்லிம்களிடத்து இனத்துவேஷ உணர்வினைத் தூண்டுவதாகவும் அவர் குற்றம்சாட்டி உள்ளார்.

## நாசா எடுத்த வெடித்துச் சிதறும் நட்சத்திரப் படம்

வானவீதியில் உள்ள நட்சத்திரங்கள் வெடித்துச் சிதறுவது தொடர்பான தகவல்களை அறிவதற்கு ''நாசா'' அனுப்பிவைத்த ''கபின்'' விண்வெளித் தொலைநோக்கிகள் பிடித்தபடங்கள் துணைசெய்துள்ளன.

பதினொரு வருடங்களுக்கு முன் வெடித்து சிதறிய ''சுப்பனோவா'' நட்சத்திரத்தின் படங்களை ''நாசா'' வெளியிட்டுள்ளது. ''சுப்பனோவா'' நட்சத்திரத்தின் சிதறல்களை இப்படங்கள் மிகத்தெளிவாகக் காட்டுகின்றன.

இந்நட்சத்திரம் வெடித்துச் சிதறியபோது சூரியனைவிட இருபது மடங்கு பெரிதாக இருந்ததாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்

இந்நட்சத்திரம் ஆயிரம் கோடி பாகை வெப்பத்தினைப் பெற்று வெடித்துச்சிதறி தன்வாழ் நாளை முடித்துக்கொண்டது.

## சம்பள அதிகரிப்பு வழங்க அமைச்சரவை அங்கீகாரம்

ஆயுதப்படை, பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு ஜனவரி மாதம் முதல் சம்பள அதிகரிப்பினை வழங்க அரசு முடிவு செய்துள்ளது இவர்களுக்கான சம்பள அதிகரிப்பு ஜனவரியிலிருந்து வழங்கப்படவேண்டுமென ஜனாதிபதி தெரிவித்த யோசனையை அமைச்சரவை ஏற்றுக்கொண்டது ஏனைய அரச ஊழியர்களுக்கான அறுபது சதவீத சம்பள அதிகரிப்பு 1998 ஜூலை மாதத்திலிருந்துவழங்கப்படும்

இதேவேளை ஆயுதப்படை பொலிஸாருக்கு உற்சவகாலக் கொடுப்பனவாக வழங்கப்பட்டுவந்த ரூபா ஆயிரத்து ஐநூறு அடுத்தமாதம் முதல் மூவாயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது

புலிகளுக்கெதிராக யுத்தத்தில் ஆயுதப்படையினர் செய்யும் சேவைக்காகவே இவ்அதிகரிப்பு வழங்கப்படுவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்

## செயலக தொலைபேசி தொடர்ந்து மௌனம்

யாழ். செயலக தொலைபேசிகள் தொடர்ந்தும் மௌனம் காப்பதாக செயலகஅதிகாரி ஒருவர் எமது நிருபரிடம் தெரிவித்தார்.

ஆனையிறவுத் தாக்குதலைத் தொடர்ந்து செயல் இழந்த யாழ். தொலைபேசிகள் மீண்டும் ஒருவாறாக

(6-ம் பக்கம் பார்க்க)

## வந்தாறுமூலைக் கண்ணிவெடி இரு படையினர் பலி பலர் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வந்தாறு மூலையில் ரோந்து வந்த படையினர் மீது விடுதலைப் புலிகள் நேற்றுமேற்கொண்ட கண்ணிவெடிதாக்குதலில் இரு இராணுவத்தினர் பலியாகினர் இருபத்தைந்து படையினர் காயம் அடைந்துள்ளனர்.

நேற்றைய தினம் ரோந்து சென்ற படையினரின் டிறக் வண்டி கண்ணிவெடியில் சிக்கியதாகவும் இதில் காயம் அடைந்தவர்களில் அதிகாரிகளும் அடங்கியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# யாழ் மாநகரசபைப் பகுதியில் நுளம்பு ஒழிப்புத் திட்டம் வெற்றி

- டாக்டர் இ. தெய்வேந்திரன்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் நுளம்பு ஒளிப்புத் திட்டம் குறிப்பிடத்தக்க விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளதாக யாழ். மாநகரசபை வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் நேற்று மாலை எமது செய்தியாளருக்குத் தெரிவித்தார்.

இதன் முதல் கட்டமாக யாழ். மாநகரசபை எல்லையில் இருக்கும் இருபத்து நான்கு குளத்திலும் நுளம்பு குடம்பிகளை அழிப்பதற்கான மருந்து தெளிக்கப்படுவதாகவும், மலேரியா நோயாளரின் தாக்கம் அதிகமாகவுள்ள பகுதிகளை இனம் கண்டு அப் பகுதிகளுக்கு மட்டும் மலத்தீன் தெளிக்கப்படுவதாக மேலும் தெரிவித்தார்.

சென்ற- வருடம் மட்டும் மலேரியா நோயின் தாக்கத்தினால் 41 பேர் இறந்துள்ளதாகவும் இதில் கால் ஆண்டில் மட்டும் 17 பேர் இறந்துள்ளதாக சுட்டிக்காட்டிய அவர் தொடர்ந்து நாம் இவ்வாண்டில் நடவடிக்கை எடுக்கத் தவறினால் மலேரியாவினால் நூற்றுக்கணக்கான மக்கள் மலேரியாவினால் மரணமடையலாம் என கருத இடமுண்டு என தெரிவித்தார். அதாவது இந்த வருட ஜனவரி மாதத்தில் மட்டும் 16 பேர் மரணம் அடைந்துள்ளதாக சுட்டிக்காட்டினார்.

மலேரியா நோயின் காரணியான நுளம்பை ஒழிப்பதற்குத் தேவையான மலத்தின் போதியளவு எடுத்து வருவதற்கு பாதுகாப்பு அமைச்சில் தடை இருப்பதினால் மிகக் குறைந்தளவு மலத்தீன் கிடைத்து வருவதாகவும் இதனை வைத்துக்கொண்டே நுளம்புடன் போராட வேண்டி இரும்பதாகவும் தெரிவித்நார்.

## புலமைப் பரீட்சையில் சித்தி

யா/ சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலையில் இருந்து ஏழு மாணவர்கள் புலமைப்பரீட்சையில் சித்தியடைந்தமை குறித்து பெற்றோர்- நலன்விரும்பிகள் வித்தியாசாலை அதிபருக்கும் ஆசிரியர்களுக்கும் பாராட்டுக்கள் தெரிவித்துள்ளனர்.

செல்விகள் க. சிந்திகா, ப. வினோதா, க. சர்மிளா, எஸ்.கௌசிஜா ஆகியோரும் செல்வன்கள் ம. நீபன், ச. கிருஷ்ணவக்ஷன், கு.கஜேந்திரன் ஆகியோரே சித்தியடைந்த மாணவர்களாவர்.

ஜனாதிபதியின்

## வருகை தாமதத்தினால் நேரடி அஞ்சல் ரத்து

சுதந்திரப் பொன்விழா நிகழ்ச்சிகளை நேரடியாக ஒலிபரப்புச் செய்ய பி. பி. ஸி. ஒழுங்கு செய்திருந்தது.

ஆனால், ஜனாதிபதி சந்திரிகாவினால் விழாவிற்கு வருகை தர காலதாமதம் ஏற்பட்டது.

எனவே திட்டமிட்டபடி பி. பி. ஸியினால் சந்திரிகா கலந்துகொண்ட பொன்விழா நிகழ்ச்சியை நேரடியாக ஒலிபரப்ப முடியாமல் போனது,

## "லக்பிம" ஆசிரியர் விடுதலை

''லக்பிம'' பத்திரிகையின் ஆசிரியர் பந்துலா பத்மகுமாரவுக்கு எதிராக அரசாங்க வழக்குத் தொடுநர் தாக்கல் செய்த வழக்கில் கொழும்பு உயர்நீதிமன்ற நீதிபதி ஷிராணி திலகவர்த்தனா அவரை எல்லாக் குற்றச்சாட்டுக்களிலிருந்தும் விடுதலை செய்தார்.

ஜனாதிபதி சந்திரிகாவை அவதூறு செய்ததாக பந்துலா மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

1995-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19-ம் திகதி வெளியான ''லக்பிம'' பத்திரிகையில் ''சட்டவிரோத மந்திரி சபையை எம். பிக்கள் எதிர்க்கிறார்கள்'' என்று ஒரு கட்டுரை வெளிவந்திருந்தது.

அக்கட்டுரை ஜனாதிபதியை அவதூறு செய்யும் விதத்தில் அமைந்திருந்தது எனக் குறிப்பிட்டே பந்துலா மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

விடுதலை செய்யப்பட்ட செய்தியைக் கேள்விப்பட்டதும் பந்துலா ''இது மிகவும் நல்ல தீர்ப்பு. இனிமேல் பத்திரிகையாளர்களுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யும் போது அரசாங்கம் இருமுறை சிந்திக்கும்'' என்று கூறினார்.

கொங்கொங்கில்

## பௌத்த மதகுருவிற்கு நன்நடத்தைப் பிணை

கொங்கொங்கில் பௌத்த மதகுரு ஒருவர் விகாரை ஒன்றுக்குச் சென்ற முடமான பிச்சைக்காரனை அடித்ததாக குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றம் ஒன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது ஒரு வருட காலத்திற்கு மதகுருவை நன்நடத்தைப் பிணையில்செல்லுமாறு நீதிபதி உத்தரவிட்டார். 30வயதான நிக்வின்டாய் என்ற இந்த மதகுருவை 130 அமெரிக்க டொலரை பிணையாக செலுத்துமாறும் உத்தரவிட்ட நீதிபதி ஒரு வருடகால நன்நடத்தையின் போது அவர் அமைதியைப் பேணுவதுபற்றி கண்காணிக்கப்படும் என்றும் அறிவித்தார், நன்நடத்தை உத்தரவை மதகுரு மீறினால் கடுமையாக தண்டிக்கப்படுவார் என்று நீதிமன்றம் அறிவித்திருக்கின்றது. கடந்த வாரம் சீன புதுவருடக் கொண்டாட்டத்தின் போது கொங்கொங் விகாரையில் வழிபாட்டிற்குசென்றபோதே மதகுரு இவ்வூனமுற்ற பிச்சைக்காரரை தாக்கியிருக்கின்றார்.

## சான்றிதழ் வழங்கல்

யாழ் மாநகரசபையின் சுகாதாரப் பகுதியினால் நடத்தப்பட்ட ஆரம்ப சுகாதார தொண்டர் பரீட்சையில் சித்தியடைந்த 150 பேருக்கு எதிர்வரும் 14-ம் திகதி சான்றிதழ் வழங்கும் வைபவம் நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி ஆரம்ப சுகாதார தொண்டர்களுக்கான பயிற்சி யுனிசெப் உதவியுடன் வழங்கப்பட்டது.

குருநகர் மீனவர்கள்

## அதிகாலை 5மணிக்குப் பின் கடலுக்குச் செல்லலாம்

(யாழ்ப்பாணம்)

குருநகர் பகுதி கடற்றொழிலாளர்க்ள் அதிகாலை 5 மணி முதல் கடலுக்கு தொழில் புரியச்செல்ல கடந்த 9-ம் திகதி முதல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் இறால் பிடிப்பவர்களுக்கு 5மணிக்கும்,ஏனையவர்கள் 5.30 மணிக்கும் செல்லலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 29-ம் திகதி அதிகாலை குருநகர் கடற்பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தை அடுத்து இப்பகுதி கடற்றொழிலாளர்கள் கடலுக்கு செல்ல நேரம் குறைக்கப்பட்டது.

இதனையடுத்து இப்பகுதி கடற்றொழிலாளர் அமைப்புக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு முறையிட்டதை அடுத்து இந்த அனுமதி வழங்கப்பட்டது.

இதேநேரம் குருநகர் கடற் பகுதியில் நேற்று அதிகளவு மீன் பிடிக்கப்பட்டது.

## மீண்டும் வேலையில் டயானாவின் மெய்க்காவலர்

வேல்ஸ் இளவரசி டயானாவைப் பலியெடுத்த கார் விபத்தில் உயிர் தப்பிய ஒரேயொரு நபரான டயானாவின் மெய்ப்பாதுகாவலர் ''ரவோர் றிவ் ஜோண்ஸ்'' இப்போது வேலைக்குச் செல்கின்றார் என்று ''சண்'' பத்திரிகை (11-2-98) செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த ஒகஸ்ட் மாதம் இடம்பெற்ற விபத்தில் றிவ் ஜோண்ஸ் தலையிலும் மார்பிலும் கடுங்காயங்களுக்குள்ளாகி இருந்தார். ஜோண்ஸ் பணியாற்றி வரும் மத்திய லண்டனில் உள்ள அரஸ் வர்த்தகத் திணைக்களத்தில் அவருக்கு இப்போது இரவு வேலை வழங்கப்பட்டுள்ளது. டயானாவுடன் விபத்தில் மரணமடைந்த அவரது நண்பர் டோடியின் தகப்பனாரான மொகமட் அல்பைட்டிற்கு இந்த வர்த்தகத் திணைக்களம் சொந்தமானதாகும்.

## சம்பள மீளமைப்பு அறிவுறுத்தல் சுற்றறிக்கை பார்வையிடலாம்

பொதுநிருவாக சுற்றறிக்கை இல. 02/97(111) இன்படி சம்பள மீளமைப்பு தயாரிக்கும் விடயத்தில் சில குறைபாடுகள் காணப்படுவதாக வட-கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் க. பரமலிங்கம் திணைக்களத்தலைவர்களிற்கு அனுப்பி வைத்துள்ளசிசி/சுற்று1/98ம் இலக்க 01-01-98ம் திகதிய சுற்றறிக்கையில் அறிவித்துள்ளார்.

குறிப்பாக பொது எழுதுநர் சேவை வகுப்பு 1. அதிசிறப்பு தரத்திலுள்ளவர்களுக்கும் சமமான சம்பள நிலைகளை பெற்றுக்கொள்வதிலேயே தெளிவற்ற நிலை காணப்படுகின்றதெனவும் இந்நிலையினை தவிர்க்க சுற்றறிக்கையினை சரிவர கிரகித்தபின்னரே சம்பள மீளமைப்பினை கணிக்குமாறும் அவர் பணித்துள்ளார்.

மேற்படி சுற்றறிக்கையினை பார்வையிட விரும்பின் எமது ராசாவின் தோட்ட வீதியில் அமைந்த அலுவலகத்தில் பார்வையிடலாம் என்பதை அறியத்தருகின்றோம்.

## வன்னியில் இருந்து படகில் வந்தனர்

(யாழ்ப்பாணம்)

வன்னிப் பகுதியில் இருந்து குடாக்கடல் ஊடாக கடந்த 9-ம் திகதி 14 பேரும், 10-ம் திகதி 4 பேரும் படகுகளில் வந்தனர்.

9-ம் திகதி வந்த 14 பேரில் 7 பேர் அளவெட்டியைச் சேர்ந்தவர்கள். 7 பேர் குருநகரைச் சேர்ந்தவர்கள்.

10-ம் திகதி வந்தவர்களில் ஒருவர் நல்லூரரைச் சேர்ந்தவர்' 3 பேர் குருநகரைச் சேர்ந்தவர்கள்.

## சமாதான நீதிபதி

மீசாலை மேற்கைச்சேர்ந்தவரும் கொழும்பு கணபதி வித்தியாலய அதிபருமான திரு வி.ஆ. தில்லைநாதன் அவர்கள் அகில இலங்கை சமாதான நீதவானாக அண்மையில் நியமனம் பெற்றுள்ளார்.

## வலி. வடக்கில் மீள் குடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்குப் பகுதியில் மக்கள் மீளக்குடியேற அப்பகுதியில்அனுமதிக்குமாறு ஜனாதிபதியிடம் வலிகாமம் வடக்கு புனர்வாழ்வு சபையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்

வலிகாமம் வடக்கு மக்கள் மிகுந்த சிரமத்தின் மத்தியில் இடம்பெயர்ந்து வசித்து வருகின்றார்கள், எனவே தொடர்ந்து அவர்கள் இவ்வாறு வாழமுடியாது என்றும் தற்போது வேண்டியது நிலையான வேலைகள் என்றும் அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது,

## பொன்விழா கிரிக்கெட் எதிர்வரும் யூனில்

சுதந்திரப் பொன்விழாவை முன்னிட்டு ஒழுங்கு செய்யப்பட்ட கிரிக்கட் போட்டி எதிர்வரும் யூன் மாதம் நடைபெறும் என்று இளைஞர் விவகார விளையாட்டு அமைச்சர் எஸ்.வி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சுதந்திரப் பொன் விழாக் கண்காட்சியை கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கிவைக்கப்பட்ட பின்னர். அமைச்சர் இதனை தெரிவித்தார்.

அவுஸ்த்திரேலியா, இந்தியா சிம்பாவே, இந்தியா போன்ற நாடுகளுக்கு இந்த கிரிக்கட் சுற்றுப் போட்டிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்றும் ஆட்டங்கள் கொழும்பிலும், கண்டியிலும் நடைபெறும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மலசல கூட சிறுசேதம் உடன் விண்ணப்பிக்கவும்

யுனிசெவ் நிதி உதவியின் கீழ் ''500 மலசல கூடங்களை திருத்தம் செய்தல்'' என்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் யாழ். மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் சேதமுற்றிருக்கும் பொதுமக்களது மலசலகூடங்களைதிருத்தம் செய்யும் பணிகள் நடைபெற்றுவருகின்றன.

சென்ற ஆண்டு இறுதி வரை 180 மலசலகூடங்கள்திருத்தம் செய்யப் பட்டிருப்ப தாகவும், இதற்கான செலவான ரூ. 1,64,755/- இனை ''யுனிசெவ்'' நிறுவனம் மீளளிப்புச் செய் திருப் பதுடன், அடுத்த கட்ட வேலைத் திட்டங்களிற்கும் நிதி உதவி வழங்க ஒப்புதல் வழங்கியுள்ளனர்.

தமது மல கூடங்கள் சிறுசேதங் களிற்கு உள்ளதாயின் யாழ்.மாநகர சபைக்கு விண்ணப்பத்தை சமர்ப்பித்து பயன் பெறுமாறும் அறிவித்துள்ளனர்.

கபிலா
காலணி அகம்
BATA
D. S. I
RANPA
SEEBA
வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட அனைத்து காலணி வகைகளையும் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்
4 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# சூரியகாந்தி

## தனிமனிதன் திருந்தவேண்டும்

நமது மக்களில் பலருடைய சமூக நடத்தைகளைக் கவனித்துப் பார்க்கும்போது சில விநோதமான முரண்பாடுகளைக் காணக் கூடியதாக இருக்கிறது.

ஏதோ அலுவலாக ராணுவம் நடத்தும் சிவில் நிர்வாக அலுவலகத்துக்கு போய் வரவேண்டி இருந்த கிராம சேவகர் ஒருவர் என்னிடம் பொரிந்து கொட்டினார்: ''பாருங்கள் எத்தனை தடவை இவர்களிடம் அலைந்து திரிவது. மூன்று தடவைக்கு மேல் போய் வந்து விட்டேன். இன்னும் ஆளையே சந்திக்க முடியவில்லை. கிராம சேவகர்களான எங்களுக்கே இவ்வளவு கஷ்டம் என்றால் பொது மக்கள் எவ்வளவு வேதனைப் படுவார்கள்''

ராணுவ சிவில் நிர்வாக அலுவலகத்துக்கு அலைந்து திரிந்து குறைப்பட்டுக் கொண்ட அந்தக் கிராம சேவகர் தன்னிடம் வருபவர்களை ''இன்று வா நாளை வா'' என்று அலைக்கழித்துக் கொண்டிருப்பது பற்றி பலர் என்னிடமே குறை கூறியிருக்கிறார்கள்

இப்படிக் குறை கூறியவர்களில் ஒருவர் தையல்தொழில் செய்பவர். இவருடைய கதையும் அதேதான்! இவரிடம் காற்சட்டை தைக்கக் கொடுத்த ஒரு ''ரிவி டெக்'' திருத்தும் கடையின் சொந்தக்காரர் மூன்று வாரத்துக்கு மேலாக இவரிடம் அலைந்து கொண்டிருக்கிறார். தன்னுடைய காற்சட்டையைத் தைத்துப் பெறுவதற்காக!

வேடிக்கை என்னவென்றால் இந்த ரிவி டெக் திருத்துபவரிடம் தன்னுடைய ''எலெக்ட்ரொனிக்'' பொருள் ஒன்றை திருத்தக் கொடுத்த ராணுவ 'கப்டன்' ஒருவர் நான்கு ஐந்து தடவைகளுக்கு மேல் வந்து போயும் இவரைச் சந்திக்க முடியவில்லை. இவர் அதனை இன்னமும் திருத்திக் கொடுக்கவும் இல்லை!

எப்படி இருக்கிறது?

கால தாமதம் ஏற்படுவது பற்றியும் அலைக்கழிக்கப்படுவது பற்றியும் எல்லாருமே குறைப்பட்டுக் கொள்கிறார்கள்.

தாங்கள் தாமதிக்கப்படும் போதும், அலைக்கழிக்கப்படும்போதும் கடுமையாகக் குறைப்பட்டுக் கொள்ளும் பலர், அவர்களால் பிறருக்கு இப்படியான சிரமங்கள் ஏற்படும் போது அதுபற்றிக் கவலைப் படுவதே இல்லை!

உபதேசம் ஊருக்குத்தான்!

இப்படியான பழக்கம் சமூக முன்னேற்றத்துக்கு நல்லதல்ல!

தனிமனிதன் ஒவ்வொருவரும் திருந்தும் போதுதான் சமூதாயம் முன்னேறும், நல்ல சமூகம் உருவாகும்.

- குமுதம்

## அரசு பதில்கள்

**காதலுக்கு மரியாதை எது? கை கோர்த்து நடப்பதா? கைவிட்டுப் பிரிவதா?**

கைவிட்ட காதல் எல்லாம் பொய்யுமல்ல மாலையிட்ட காதல் எல்லாம் மரியாதைக்குரியதல்ல. பிரிந்து போனாலும் இறுதி வரை இதயத்தின் ஓரத்தில் வாழும் காதல் உண்டு சேர்ந்து வாழ்ந்தாலும் சீக்கிரத்திலேயே பூசலிடும் காதலும் உண்டு.

**சோனியா பலம் என்ன! பலவீனம் என்ன?**

பலம் : மனித வெடிகுண்டு
பலவீனம் : பீரங்கி.

**சாதாரணசலவை சோப் வாங்கினால் கூட பல முறை யோசித்து வாங்கும் மக்கள் தேர்தலின் போது மட்டும் குழம்புவது ஏன்?**

சோப் வாங்கும் போது காசு கரைகிறது எனவே கவனம் அதிகரிக்கிறது. ஓட்டு' போடும் போது காசு வருகிறது எனவே தடுமாற்றம் ஏற்படுகிறது. நீதி: காசு வந்தால் கூடவே குழப்பம் வரும்

**ரஜினிகாந்தின் பேச்சு இனி மக்களிடம் எடுபடாது என்கிறாரே ஜெயலலிதா ?**

படுத்துக் கொண்டே ஜெயித்தவர் எம்.ஜி.ஆர். பேசாமலே ஜெயித்துக் கொண்டிருப்பவர் ரஜினி.

**வாழ்க்கையில் முன்னேற்றம் என்பது எப்படி இருக்க வேண்டும்?**

விலைவாசி போல

**சிறிய விஷயங்களுக்குக்கூட ஜெ, அறிக்கை விடுகிறார். பெரிய விஷயங்களுக்குக்கூட மூப்பனார் வாயைத் திறப்பதில்லை ஏன்?**

ஒரு ஊரில் ஒரு ராஜா. நாட்டிலேயே யாராலும் ஜெயிக்க முடியாத வில் வீரன், எவனோ அவனுக்கு விலை மதிப்பு மிக்க பரிசு ஒன்று அளிப்பதாக அறிவித்தான். அதைக்கேட்ட இளைஞன் ஒருவன் வில்வித்தை நன்கு அறிந்த ஒருவரிடம் போய்ச்சேர்ந்து கற்றுக்கொள்ள ஆரம்பித்தான். ஆறு மாதத்தில் பயிற்சி முடிந்தது. கிளம்பும்போது குரு சொன்னார். 'ஒன்றே ஒன்றைத் தவிர எனக்குந் தெரிந்த எல்லாவற்றையும் உனக்குக் கற்றுக்கொடுத்துவிட்டேன்.'

திடீரென்று அந்த சிஷ்யனுக்கு ஒரு கவலை வந்தது! போட்டியில் நமது குருவும் கலந்துகொண்டால்? நம்மைவிட அவருக்கு ஏதோ ஒனறு அதிகம் தெரியுமே. அவரல்லவா ஜெயித்துவிடுவார்? வேறுவழியில்லை. குருவைத் தீர்த்துக் கட்டிவிடவேண்டியதுதான் என்று சீடன் முடிவுசெய்தான். அவர் ஆற்றில் குனிந்து நீர் அள்ளிப் பருகிக்கொண்டிருந்த போது, பின்னால் அமபு விட்டான். சடக்கென்று திரும்பிய குரு வெறும் கையால் அதைத் தடுத்துப் பிடித்துவிட்டார். சீடன் தடாரென்று காலில் வீழ்ந்தான்.

மன்னிக்கவேண்டும் குருவே 'போட்டிக்கு நீங்களும் வந்துவிட்டால் என்னசெய்வது என்ற குழப்பத்தில் அம்பு எய்துவிட்டேன்' என்றான். குரு சிரித்தார். 'எந்தக் குருவும் எல்லாவற்றையும் சீடனுக்குச் சொல்லித் தந்துவிடுவது கிடையாது. என்னைக் கொன்றுவிட்டால் பிரச்சினை தீர்ந்துவிடுமா? எனக்குக் கற்றுக்கொடுத்த குரு இன்னும் உயிரோடு இருக்கிறாரே? அவர் போட்டிக்கு வந்தால் . . . ? என்றார் குரு. சரி அவரையும் போய்ப் பார்த்துவிடுவோம் என்று புறப்பட்டான் சீடன். பெரிய குரு முன்னால்சென்று வனங்கினான். நீ யார்? என்றார் அவர். 'வில்வீரன்' என்றான். வீரன் என்று சொல்லுகிறாய் ஏன் இன்னும் ஆயுதத்தைத் தூக்கி அலைந்துகொண்டு திரிகிறாய்? என்றார் பெரிய குரு. சீடனுக்குப் புரியவில்லை. அவரே தொடர்ந்தார். 'உண்மையான வீரர்கள் எல்லா நேரத்திலும் ஆயுதங்களைத் தூக்கிக்கொண்டு செல்வதில்லை'

## சமுர்த்தித் திட்டங்கள்

சமுர்த்தி வேலைத் திட்டங்கள் வெகு விரைவில் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படும்.

சமுர்த்தி இயக்கம் பற்றி அறிவித்த இளைஞர் விவகார விளையாட்டு அமைச்சர் எஸ். பி. திஸாநாயக்கா அவர்கள் வெகு விரைவில் யாழ்மாவட்டத்தில் சமுர்த்தி வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படும் என்றும், வடபகுதியில் புதிதாக தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களினூடாக சமுர்த்தி திட்ட நன்மைகளை யாழ்ப்பாண மக்களுக்கு வழங்கக் கூடியதாக இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

## ஃபிளையிங் ஸ்டார் வெற்றி

ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அனுசரணையுடன் நடாத்தப்பட்ட கூடைப்பந்தாட்ட இறுதி ஆட்டத்தில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகத்தை ஃபிளையிங் ஸ்டார் (37 - 24) புள்ளிகளால் வெற்றிபெற்று சம்பியன் ஆனது. மேற்படிபோட்டி பரியோவான கல்லூரி திடலில் நடைபெற்றது.

## ஆசிரிய இடமாற்றங்கள்

யாழ் மாவட்ட பாடசாலைகளில் நீண்ட காலம் பணியாற்றிய 170 ஆசிரியர்கள திருகோணமலை, மட்டக்களப்பு ,வவுனியா முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய இடங்களுக்கு இடமாறறம் பெற்றுள்ளனர் வடகக்கு கிழக்கு மாகாணகல்விஅமைச்சின் உத்தரவுக்கமைய யாழ் கல்வித்திணைக்களம் இடமாற்றக் கடிதங்களை வழங்குகின்றது. இதே நேரம் வெளி மாவட்டங்களில் இருந்து 27 ஆசிரியர்கள் யாழ் மாவட்டத்துகுகு இடமாற்றம் செய்யப்படுகின்றார்கள்

## அற்புதராசா ஓய்வு பெற்றார்

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராகக் கடமையாற்றிய திரு ஜே. ஜே. அற்புதராசா அவர்கள் அண்மையில் ஓய்வு பெற்றுள்ளார். அன்னாரின் சேவைதனைப்பாராட்டி ஆசிரிய மாணவர் ஒன்றியத்தினால் பிரிவுபசார விழா நடாத்தப்பட்டது.

(சி-1)

## 'தமிழனாய் பிறந்த குற்றம்'

- எஸ். சிவதாசன்

கண்டி தலதா மாளிகை குண்டுவெடிப்பிற்குப் பின்னர் நாட்டில் தமிழர்களுக்கு ஏற்பட்ட தொல்லைகள் ஏராளமானவை. நாட்டில் என்ன சம்பவம் நடந்தாலும் தமிழர்களாய் பிறந்த ஒரே ஒரு குற்றத்திற்காக அவர்கள் பல்வேறு தொல்லைகளுக்குட் படுத்தப்படுகின்றனர். ஐக்கியமான அமைதியான நாட்டைக் கட்டியெழுப்புவதே அரசின் எண்ணமாக இருந்தால் முதலில் தமிழர்களின் பிரச்சனையை தீர்க்க வேண்டும். தமிழர்களுக்கு சமவுரிமை வழங்கப்படவேண்டும்.

இவ்வாறு யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி உறுப்பினர் எஸ். சிவதாசன் பாராளுமன்றத்தில் நடைபெற்ற அவசர காலச் சட்ட நீடிப்பு விவாதத்தில் உரையாற்றிய போது தெரிவித்தார்.

## சுங்க திணைக்கள வருமானம் வீழ்ச்சி

அரசாங்கம் பல்வேறு வரிச் சலுகைகளை அமுலுக்கு கொண்டு வந்ததை அடுத்து சுங்கத் திணைக்களத்தின வருமானம் வீழ்ச்சி அடைந்துள்ளது. எனினும் நாட்டின் பொருளாதாரத்தில் இது எந்த பாதிப்பையும் ஏறபடுத்த மாட்டாது என்று சுங்கப் பணிப்பாளர் நாயகம் எஸ்.எம்.ஜி. சேனரத்ன தெரிவித்தார்.

## பதின்மூவாயிரம் செலவு

யாழ் மாநகரப் பகுதிளில் மலேரியா நோய் பரவுதலை தடைசெய்யும் வேலைத் திட்டத்தின கீழ் சிறிய அளவிலான திருத்தங்களை உடைய பொதுமககளின் பாவனையிலுள்ள மல கூடங்களை மாநகர சபையினர் திருத்தம் செய்து வருகின்றனர்.

முதலாம் கட்டமாக ருபா பதின்மூவாயிரம் செலவில் 107 மலகூடங்கள் சென்ற ஆண்டின் இறுதிவரை திருத்தம் செய்து வழங்கப்பட்டுள்ளதாகவும் தொடர்ந்து இவ் வேலைகள் மேற்கொள்ளப் படுவதாகவும் யாழ் மாநகர சபையின் சுகாதாரப்பகுதி அதிகாரி எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்

ஒரு பயிற்ற பட்ட ஆசிரியரின் அபிப்பிராயம்

## ஆசிரிய சேவையில் சம்பள முரண்பாடு

தற்போது நடைமுறையிலுள்ள புதிய சம்பளத்திட்டத்தின்படி சேவை மூப்புள்ள ஒரு பயிற்றபபட்ட ஆசிரியர் 2;2 சம்பள உச்சத்தைப் பெற ஏறக்குறைய 23 வருட சேவையை பூர்த்தி செய்ய வேண்டியவராக இருக்கிறார். ஆனால் அதே நேரத்தில் ஒரு பட்டதாரி ஆசிரியர் நியமனம் பெற்று 11 வருட சேவையின் பின் 2:1 சம்பள உச்சத்தை பெறக்கூடியதாக இருக்கின்றது. இப்படியான முரண்பாடுகள் நிறைந்த சம்பளத் திட்டத்தினால் பல பக்க விளைவுகள் ஏற்படுகின்றன.

ஒன்று ஆசிரியர்கள் சேவை மூப்பு மதிக்கப்படுவதில்லை.

இரண்டு சம்பள உச்சத்தை குறுகிய காலத்தில் பெறும் ஒரு ஆசிரியருக்கு தனது அடுத்த சம்பள உயர்ச்சியை எதிர்பார்த்து கடுமையாக உழைக்க வேண்டிய அவசியம் இல்லாது போகின்றது.

மூன்றாவது சேவை மூப்புள்ள பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு நீண்ட கால சேவையின் பின்பும் உரிய சம்பள உயர்வு கிடைக்காமையால் மனச் சலிப்பும் விரக்தியும் ஏற்படுகின்றன. இதனால் அவர்களது சேவைத் திறன் கடுமையான பாதிப்புக்குள்ளாகின்றது.

வேறு விதமாகச் சொன்னால் குறுகிய கால சேவையில் சம்பள உச்சத்தை பெறுபவரின் சேவைத் திறனும் நீண்டகால சேவையின் பின்பும் சம்பள உச்சத்தை பெறாத ஆசிரியரின் சேவத் திறனும் வேறு வேறு கராணங்களால் பாதிக்கப்படுகின்றது.

இதன் பக்க விளைவாக ஒட்டு மொத்தமாகப் பாதிக்கப்படுவது மாணவ சமுதாயமே. எனவே கூடிய விரைவில் இவ் முரண்பாட்டை நீக்க கல்வி இலாகாவும் ஆசிரிய தொழிற்சங்கங்களும் முயற்சி எடுக்கவேண்டும்.

- பயிற்றப்பட்ட ஆசிரியர்

# "ஜனாதிபதி சட்டத்தரணிகள்" நியமனம் சட்டத்தரணிகள் பிரச்சினை கிளப்புகிறார்கள்

அண்மையில் ஜனாதிபதி சில சட்டத்தரணிகளை 'ஜானாதிபதி சட்டத்தரணி' களாக நியமனம் செய்திருந்தார்.

இப்படி நியமனம் பெற்றவர்கள 8 பேர் இவ் எண்மரில் ஒருவர் முஸ்லீம் ஒருவர் தமிழர். தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த நீலன் திருச்செல்வம்தான் இம்முறை ஜனாதிபதி சட்டத்தரணியாக நியமிக்கப்பட்டவர்களுள் ஒரே ஒரு தமிழர்.

இந்த நியமனங்கள் பற்றி இலங்கையின் சட்டத்தரணிகள் சங்கம் பெருத்த அதிர்ச்சியும் ஆச்சரியமும் தெரிவித்துள்ளது. மேற்படி சங்கத்தை சேர்ந்த சில சட்டத்தரணிகள் ஜனாதிபதி இந்த எண்மரையும் எவ்வாறு தெரிவு செய்தார்? ஏன் தெரிவு செய்தார்? எனக் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இவ்வாறான நியமனங்கள் நடைபெறும் போது சட்டத்தரணிகள் சங்கத்தையும் ஜனாதிபதி கலந்து ஆலோசிப்பது மரபு.

இம்மரபு மீறப்பட்டது குறித்து பிரபல சட்டத்தரணிகள பலர் கவலை தெரிவித்துள்ளனர்.

றொமேஸ் டி.சில்வா அவர்களை தலைவராகக் கொண்ட சட்டத் தரணிகள் சங்கத்தின் நடவடிக்கைச் செயற்குழு இது பற்றி விவாதிப்பதற்காக விரைவில் கூட இருக்கிறது.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டவர்களில் சிலர் நீதிமன்றங்களில் ''பிராக்டீஸ்'' எதுவும் இல்லாதவர்கள் என பல சட்டத் தரணிகள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

## இந்திய கிரிக்கெற் வீரருக்கு எதிராக வழக்கு தாக்கல்

இந்திய முன்னாள் கிரிக்கெற் வீரர் மனோஜ் பிரபாகருக்கு எதிராக இந்திய கிரிக்கெற் அதிகாரிகள வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

கிரிக்கெற் போட்டியொன்றில் வேண்டுமென்றே தோல்வியை ஏற்படுத்த சக வீரர் ஒருவர் தனக்கு லஞ்சம் தரமுற்பட்டதாக பத்திரிகைக்கு அளித்த பேட்டியைத் தொடர்ந்தே, பிரபாகருக்கெதிராக மானநஷ்ட வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக இந்திய கிரிக்கெற் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

## 'ரெலோ' மீது துப்பாக்கிச் சூடு

ஆரையம்பதி செல்வா நகரில் சென்ற செவ்வாய்க்கிழமை இரவு ரெலோ இயக்கத்தின் உறுப்பினர்கள் இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி தற்போது மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## நெடுந்தீவு முதலிடம்

1997ம் ஆண்டு நடந்த ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ் மாவட்டத்தில் நெடுந்தீவைச் சேர்ந்த மாணவி அபிராமி யோகேஸ்வரன் 158 புள்ளிகள் பெற்று முதலிடம் பெற்றமையை பலரும் வியந்து பாராட்டியுள்ளனர்.

# யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த 549 பேருக்கு நேர்முகப் பரீட்சை

யாழ் மாவட்டத்தில் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. நேர்முகப் பரீட்சை மூலம் 934 பேர் இந்த வெற்றிடங்களுக்கு நியமிக்கப்படவுள்ளார்கள்.

இந்த நேர்முகப் பரீட்சையை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், மட்டக்களப்பு, அம்பாறை, வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் இம்மாதம் 27ம் 28ம் திகதிகளில் நடைபெறும்.

யாழ் மாவட்டத்தில் 549 பேர் நேர்முகப் பரீட்சைமூலம் தோற்றவுள்ளனர் ஏனையோர் 385 பேர் வேறுமாவட்டங்களில் நேர்முகப் பரீட்சைக்குப் தோற்றவுள்ளார்கள் இவர்கள் அனைவரும் ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்றவர்களேயாவார்கள்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிலவும் ஆசிரியர் பற்றாக் குறையை 3 மாதத்தில் நீக்குமாறு கல்வி உயர்கல்வி அமைச்சர் றிச்சாட் பத்திரண வடக்குக் கிழக்கு மாகாண செயலாளருக்கு பணிப்புரை விடுத்ததிற்கமைய இத்தகையோர் தெரிவு செய்யப்பட இருக்கிறார்கள்.

# ராணுவம் எடுத்த வாகனம் செயலிழந்த நிலையில்

யாழ். மாநகர தீயணைப்பு சேவை கடந்த ஒன்றரை ஆண்டுகளாகச் செயலிழந்து போயுள்ளது. சூரியப்பிரகாச இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து இராணுவத்தினரால் எடுத்துச்செல்லப்பட்டு பின்னர் மீளளிக்கப்பட்ட பொழுது தீயணைப்பு வாகனம் முழுமையாக செயலிழந்து போயிருந்ததாகவும் கட்டியிழுத்து வரப்பட்ட வாகனத்தை திருத்தம் செய்வதற்காக உதிரிப்பாகங்கள் எதனையும் இங்கு பெறமுடியாதுள்ளதாகவும் தெரிய வருகிறது.

மேலும் திருத்த வேலைகளிற்கான செலவுகள் மற்றும் புதிய உதிரிப்பாகங்களைக் கொள்வனவு செய்வதற்கான நிதி உதவியை வழங்குவது பற்றி சாதகமாக பரிசீலிப்பதாக கனேடிய உயர்ஸ்தானிகராலயம் சம்மதம் தெரிவித்துள்ளது. மேற்படி தீயணைப்பு வாகனம் கனேடிய தூதுவராலயத்தாலேயே முன்னர் அன்பளிப்புச் செய்யப்பட்டது குறிப்பிடத்தகது.

இந்திய தேர்தல் களம்

# இந்திய ஜனாதிபதி நாராயணன் தன்னைப் பாதுகாத்துக் கொண்டார்

இந்திய அரசியலில் ஐக்கிய முன்னணி சந்தர்ப்பவசத்தால் உருவாகிய ஓர் அமைப்பே, இங்கும் காங்கிரசின் பலம் மேலோங்கியிருந்தது. தேவ கௌடாவைத் தொடர்ந்து இந்திர குமார் குஜ்ராலை பிரதமராக்கிக் கொண்டு சியூகம் அமைத்த ஐக்கிய முன்னணி. காங்கிரசின் ஆசியுடன் ஆட்சிப்பீடமேறியது. கௌடாவுக்கு நேர்ந்த கதி தனக்கும் ஏற்படலாம் என்பதை பழுத்த அரசியல்வாதியான குஜ்ராலுக்கு புரிந்து கொள்வது கடினமல்ல. ஆனாலும் இந்தியாவின் அதியுயர் பிரதமர் பதவியில் ஒரு நாள் இருந்தாலும் அதைவிடப் பாக்கியம் வேறில்லை என்பதையும் குஜ்ரால் அறிந்தே இருந்தார்.

இந்தியாவைப் பொறுத்தவரையில் பிரதமர் பதவியில் இருப்பவர் வறுமை ஒழிப்பிற்கு, ஊழல் அழிப்பிற்கு எவ்வளவு உதவினார் என்பதைவிட, பாகிஸ்தானின் பிரச்சனையில் எவ்வாறு நடந்து கொள்கிறார் என்பதைக் கொண்டுதான் அவரின் ஆளுமை - அரசியல் தந்திரம் கணிக்கப்பட்டது. எழுபத்தெட்டு வயதான குஜ்ரால் பாகிஸ்தானுடன் சுமுகமான போக்கை கடைப்பிடிக்கவே விரும்பினார். அதற்காக பாகிஸ்தான் பிரதமர் நவாப் ஷெரிப்புடன் நேரில் சந்தித்தும், தொலைத் தொடர்பு மூலமும் ஓர் உறவை ஏற்படுத்திக் கொண்டார்.

ஊழலுக்கெதிராக குரல் கொடுத்த குஜ்ரால் உலக நாடுகளுக்கு விஜயம் செய்து இந்தியாவுடனான வெளிநாட்டு உறவை மேலும் விரிவுபடுத்தினார். இலங்கை இனப்பிரச்சினையில் தலையிடுவதை முழுமையாகத் தவிர்த்துக்கொண்டார். கௌடாவின் அரசியல் வெளியுறவு அமைச்சராக இருந்த குஜ்ரால், சார்க் மாநாட்டிற்காக இலங்கை வந்திருந்த போது ''மீண்டும் நெருப்பில் கைவைக்க இந்தியா விரும்பவில்லை'' என்ற அவரின் கூற்று இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா தலையிடப் போவதில்லை என்பதையே பிரதிபலித்தது. அத்துடன் இலங்கை இனப்பிரச்சனையில், - விடுதலைப் புலிகளின் விடயத்தில் இந்தியா நடந்து கொண்ட முறை தவறு என்பதையும் அவர் மறைமுகமாக ஒப்புக்கொண்டுள்ளார். வெளியுறவு அமைச்சராக இருந்த அதே குஜ்ரால் பிரதமராகிய போதிலும், இலங்கை இனப்பிரச்சனை தொடர்பான தனது கொள்கையில் மாற்றத்தை செய்யவில்லை. மாறாக அமைதியாக, ஆடம்பரமின்றி, பிரதமர் பதவியை அலங்கரித்த அவர் இந்தியாவின் அரச இயந்திரத்தை மெல்ல நகர்த்திச் சென்றார்.

இதற்கிடையே காங்கிரஸ் கட்சிக்குள் தலைமைப் பதவிக்கான தேர்தல் களைகட்டத் தொடங்கியது. ராஜீவ் காந்திக்குப் பின் காங்கிரசின் தலைவராகவும், பிரதமராகவும் இருந்த நரசிம்மராவ் ஊழலின் பிடிக்குள் சிக்கி நீதிமன்றப் படிகள் ஏறவேண்டியதாயிற்று. இதனால் காங்கிரசின் தலைமைப் பதவியில் இருந்து நரசிம்ராவ் விலக வேண்டுமென்ற கோஷங்கள் கட்சிக்குள் உரக்க ஒலித்தன. அதை ஏற்றுக்கொண்டு, கௌரவமாக நரசிம்மராவ் கட்சியின் தலைமைப் பதவியை இராஜினாமாச் செய்தார். தலைவன் இல்லாத கப்பலைப்போல் தத்தளித்த காங்கிரசை வழிப்படுத்த மூத்த அரசியல் வாதியான சீதாராம் கேசரிக்குதற்காலிக தலைமைப் பதவி வழங்கப்பட்டது.

இந்நிலையில் நிரந்தரமான தலைமைத்துவத்தைத் தெரிவு செய்யவேண்டியது கட்சிக்கு அவசியமாயுள்ளது. தற்காலிக

"விதுரன்"

தலைவராக இருக்கும் கேசரிக்கும். காங்கிரஸ் கட்சியின் முக்கிய புள்ளிகளான சரத் பவார், ராஜேஸ்பைலட் ஆகியோருக்கும் காங்கிரசின் தலைமையில் மோகம் ஏற்பட்டது. ஆனாலும் சீதாராம் கேசரிககு கட்சி அங்கத்தவர்களின் ஆதரவு அதிகம். இதனால் அவரே காங்கிரசின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

நேரு கட்டிக்காத்த, இந்திராகாந்தி அலங்கரித்த தலைவர் பதவி தனக்குக் கிடைத்தவுடன், பிரதமர் பதவிமீதும் ஆசை ஏற்படவேசெய்தது. தனது ஆசை நிறைவேறவேண்டுமானால், பிரதமர் ஆசனம் கிடைக்க வேண்டின், அமைதியாக - அடக்கமாக ஆமை வேகத்தில் நகர்ந்து செல்லும் குஜ்ராலின் அரச இயந்திரத்தை நிறுத்தவேண்டும். ஓடும் இயந்திரத்தை உடன் நிறுத்துவது சுலபமல்ல. அதற்கும் சந்தர்ப்பம்-சாட்டு-ஆதாரம் வேண்டும். அதற்காகக் கேசரி காத்திருந்தார். பழம் நழுவிப் பாலில் வீழ்ந்ததுபோல ராஜீவ் காந்தி கொலை தொடர்பான 'ஜெயின்' அறிக்கை வெளிவந்தது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த கேசரி தயாரானார். ராஜீவின் கொலையில் தி.மு.க வுக்கும் பங்குண்டு. இதை ஜெயின அறிக்கை உறுதிப்படுத்துகிறது. எனவே ஐக்கிய முன்னணியிலுள்ள தி.மு.க. அமைச்சர்களையும், உறுப்யினர்களையும் வெளியேற்ற வேண்டும். இதுவே ஐக்கிய முன்னணி ஆட்சியைக் கவிழ்க்க சீதாராம் கேசரி பயன்படுத்திய உபாயம், தனது கோரிக்கையை ஏற்று தி.மு.கவை வெளியேற்ற குஜ்ரால் ஒருபோதும் தயாரில்லை. இதை கேசரியும் உணராதவரல்ல. ஆனாலும் ஐக்கிய முன்னணி அரசைக் கவிழ்க்க இதுதான் தருணம் என்பதில் காங்கிரஸ்க் கட்சியில் ஒரு சாராரும் கேசரியும் உறுதியாக இருந்தனர்.

திரைமறைவில் நடந்த காங்கிரஸின் கபட நாடகம் இப்போது அரங்கேறியது. அதை ஐக்கிய முன்னணியும் கண்டு கொண்டது. இவ்விடத்தில் பெருந் தன்மையோடு நடந்து கொள்ளவே குஜ்ரால் விரும்பினார். தி.மு.கவை, முன்னணியில் இருந்து வெளியேற்ற முடியாது என்பதை அவர் உறுதிபடக் கூறிவிட்டார். கௌடாவுக்கு நடந்ததுதான் தனக்கும் என்பதை உணர்ந்து கொண்ட குஜ்ரால் ஜனாதிபதி கே.நாராயணனைச் சந்தித்து தனது இராஜினாமாக் கடிதத்தை சமர்ப்பித்தார். அவரைப் போன்றே முன்னணி அமைச்சர்களும் நடந்துகொண்டனர்.

தொங்கு பாராளுமன்ற நிலையினால் ஏற்படக் கூடிய தளம்பல்களைச் சந்தித்த ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா பதவியிலிருந்து ஓய்வெடுத்துக்கொள்ள உபஜனாதிபதியாக இருந்த கே.நாராயணன் ஜனாதிபதியாகப் பதவி ஏற்றார். அவர் பதவி ஏற்ற ஆரம்பத்திலேயே குஜ்ராலின் இராஜினாமாவும் இடம்பெற்றது. இவற்றையெல்லாம் சமாளிக்க வேண்டிய பொறுப்பு நாராயணனிடம் தான் உண்டு. அவர் எடுக்க விருந்த முடிவினை முழு உலகமுமே அவதானித்தது. உபவேந்தராக - வெளிநாட்டுத் தூதுவராக - உபஜனாதிபதியாக இருந்த நாராயணன் இது விடயத்தில் புத்தி சாதுரியமாக நடந்துகொண்டார். நாடு எதிர்நோக்கிய பிரச்சனைகளைத் தீர்க்க அரசியற் கட்சிகளை அழைத்துப் பேசினார். தேர்தல் வருவதையே காங்கிரஸ் பாரதிய ஜனதா மற்றும் ஐக்கிய முன்னணி விரும்புவதை நாராயணன் கண்டுகொண்டார். எந்தக் கட்சிக்கும் தனித்தோ, கூட்டாகவோ ஆட்சியமைக்கும் ஆரோக்கியம் இல்லை என்பதை அறிந்து கொண்ட நாராயணன், மீண்டுமோர் தேர்தலுக்காக இந்திய மக்களை அழைத்துச் செல்லத் தீர்மானித்தார். அதன் ஆரம்ப வேலையாகப் பாராளுமன்றத்தைக் கலைத்துவிடும் அறிவிப்பை உத்தியோக பூர்வமாக வெளியிட்டுத் தன்னை பாதுகாத்துக் கொண்டார்.

பெரிய



## "புதிய திருமணம்" விரைவில் நடக்கப் போகிறது!

துரை

''ஆரோக்கியமான'' ஒரு பெண் பிரதி அமைச்சர் தனது கணவனை ''தொப்'' பென்று அந்தரத்தில் போட்டுவிட்டார்.

போட்டதற்குக் காரணம் பாதுகாப்புத் துறையொன்றுடன் தொடர்புடைய திடகாத்திரமும் உடற்கட்டும் கொண்ட ஒரு ''இளவயசு''க்காரரின் நட்பு.

பெண் பிரதி அமைச்சரின் ''நண்பர்'' இப்போது தான் வகித்து வந்த பதவியை ராஜினாமாச் செய்துவிட்டார்.

அவருக்கு இப்போது ஒரு உயர் பதவி காத்துக் கிடக்கிறது.

''புதிய திருமண''மும் விரைவிலேயே நடக்கப் போகிறது!

# விலகியவர்களுக்கு மீண்டும் மன்னிப்பு தண்டனை, பதவிகுறைப்பும் இல்லை

-ஜனாதிபதி

(கொழும்பு)

இலங்கைப் பாதுகாப்பு படையில் இருந்து விலகியவர்கள் எதிர்வரும் இருபதாம் திகதி நள்ளிரவுக்கு முன் மீண்டும் படையில் இணைந்து கொள்ளலாம் என அறிவிக்கப் பட்டுள்ளது. மீண்டும் படையில் இணைந்துகொள்பவர் களுக்குஜனாதிபதியால்பொது மன்னிப்பு வழங்கப்படும்.

பல்வேறு காரணங்களுக்காக படையை விட்டு விலகிச் சென்றவர்கள் எதுவித விசாரணையும் இன்றி இருபதாம் திகதிக்கு முன்னர் மீண்டும் சேர்க்கப்படுவார்கள் அவர்களுக்கு எதுவித தண்டனையோ, பதவிகுறைப்போ வழங்கப்படமாட்டாது படையைவிட்டு விலகுவதற்கு முன் எந்தப் பதவியில் இருந்தார்களோ அதேபதவி திரும்பவும் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீண்டும் வந்து இணையும் படையினரை எந்தவிதமான அலட்சியமும் இன்றி கௌரவமான முறையில் படையில் இணைத்துக்கொள்ள வேண்டும் என சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

## உளநல மேம்பாட்டு கருத்தரங்கு

எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை பாடசாலை ஆசிரியர்களுக்கான ''உள நலமேம்பாடும் கல்வி வழி காட்டல் கருத்தரங்கும் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் காலை 9 மணிக்கு ஆரம்பித்து பிற்பகல் 2 மணி வரை நடைபெறவிருப்பதால் ஆர்வமுடையோர் பங்கு பற்ற அழைக்கப்படுகின்றனர்.

(சி -)

## பாடசாலை கிரிக்கெட்

இம்மாதம் ஒன்பதாம், பத்தாம் திகதிகளில் யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில், யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கும் மானிப்பாய் இந்துக்கல்லூரி அணிக்கும் இடையில் இடம்பெற்ற பத்தொன்பது வயதுக்குட்பட்ட அணிகளின் கிரிக்கெட் ஆட்டத்தில் மானிப்பாய் அணி ஏழு விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றியீட்டியது முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி மு. ஜீவன், சிவசர்மன் ஆகியோரின் திறமையான பந்து வீச்சினால் 29 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்துமு. ஜீவன் 19ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளையும் சிவசர்மன் 7 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி 115 ஓட்டங்களுக்கு சகலவிக்கெட்டுகளையும் இழந்தது இதில் ஓங்காரரூபன் 36 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்து வீச்சில் பிரகாஸ் 16 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இரண்டாவது இன்னிங்சில் யாழ்ப்பாணக் கல்லூரி அணியினர் 138 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தனர். இதில் பிரநாமன் 32 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் டினேஸ் 6 விக்கெட்டுகளையும்மோகன்றாஜ் 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். வெற்றி பெற 53 ஓட்டங்கள் பெறவேண்டிய நிலையில் களத்தில் இறங்கிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 3 விக்கெட் இழப்புக்கு 53 ஓட்டங்களைப் பெற்று 7 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

## திருமதி சின்னையா இளைப்பாறினார்

நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வர வித்தியாலய அதிபர் திருமதி புஷ்பராசவதி சின்னையா அவர்கள் 39 ஆண்டுகளாக ஆசிரிய அதிபர் பணிபுரிந்து அண்மையில் ஓய்வுபெற்றார் இவர் தேசிய கல்வி நிறுவக பட்டதாரி ஆசிரிய மாணவர்களுக்குத் தொடர்ந்தும் கல்வி டிப்ளோமா - விரிவுரையாளராக பணிபுரிந்து வருவது குறிப்பிடத்தக்கது.

## தேர்தல் பணியில் .ராணுவம்

இந்தியாவில் நடைபெறவிருக்கு'' தேர்தலில் ஏற்படவிருக்கும் வன்முறைகளைத் தடுப்பதற்கு இராணுவத்தினர் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

வாக்குச்சாவடிகளைக் கைப்பற்றுதல், குண்டர்களின் தாக்குதல், கள்ள ஓட்டுக்கள் பிரயோகம், தேர்தல் வன்முறைகள் என்பவற்றைத் தடுக்கவே, வன்முறை நடைபெறக் கூடும் இடங்கள் எனச் சந்தேகிக்கப்படும் பிரதேசங்களில் இராணுவத்தினர் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இத் தகவலை இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையாளர் எம். எஸ். ஹில்நேற்று பி. ரீ. ஐ. செய்தி ஸ்தாபனத்திடம் தெரிவித்துள்ளார். ஏற்கனவே பணியில் ஈடுபட்டிருக்கும் பொலிஸாருடன் ஒரு லட்சம் ராணுவ வீரர்கள் கடமையில் ஈடுபடுவார்கள் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இந்திய பொதுத் தேர்தல் மக்களுக்குப் பெருஞ்சுமை

கருணாநிதி

எதிர்வரும் வாரங்களில் இரண்டு கட்டமாக நடைபெறவுள்ள தேர்தல் இந்திய குடிமக்களை பொறுத்தவரை ஒரு பெருஞ்சுமை''என செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.தி'மு, க. தலைவர்.மு கருணாநிதி

இது தொடர்பாக அ,தி, மு,க பொதுச் செயலர்செல்வி ஜெயலலிதாவிடம் கருத்துக் கேட்டபொழுது தமிழன் ஒருவர்பிரதமராக வருவதை தடுத்ததன் மூலம் தேர்தலை வரவழைத்த கருணாநிதி தான் இச்சுமைக்குக் காரணம்'' எனதெரிவித்தார்'

## சுன்னாகம் மீண்டும் கலகலப்பாகிறது

சுன்னாகம் பிரதேசத்தில் மீளக்குடியமர்வோர் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. சுன்னாகம் மத்தி கிராமசேவையாளர் பிரிவிலும், கந்தரோடை கிராம சேவையாளர் பிரிவிலும் பலர் மீளக்குடியமர விண்ணப்பித்துள்ளனர். இதேவேளை சுன்னாகம் சந்தையிலும் பல புதிய வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டு வருகின்றன. தைப்பூச தினமாகிய செவ்வாய்க்கிழமை மாத்திரம் பத்துக்கு மேற்பட்ட வர்த்தக நிலையங்கள் புதிதாகத் திறக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தலதா புனரமைப்புக்கு பொது அமைப்புகள் அன்பளிப்பு

(கொழும்பு)

தலதாமாளிகையினைபுனர் நிர்மாணம் செய்வதற்காக பல தரப்பினரிடமிருந்து அன்பளிப்புக்கள் வந்துகொண்டிடிருக்கின்றது. கொடைவள்ளல்களும் பொது அமைப்புக்களும் தங்கள் அன்பளிப்புகளை வழங்கி வருகின்றனர்.

நேற்று முன் தினம் இலங்கையில் தைக்கப்பட்ட ஆடைகள் ஏற்றுமதியாளர் சங்கம் முப்பது லட்சம் ரூபாவினை அன்பளிப்பாக வழங்கி உள்ளது. இச்சங்கத்தின் தலைவர் அஷ்ரப் உமர் அலரிமாளிகையில் ஜனாதிபதியிடம் இப்பணத்தினை கையளித்தார்.

இதேவேளை ''பைஃப் ஸ்ரார்'' நிறுவன ஊழியர் அனைவரும் தமது ஒருநாள் சம்பளத்தினை தலதாமாளிகை புனரமைப்புக்கு வழங்க உள்ளதாக அந்நிறுவனத்தின் தலைவர் தெரிவித்தார்.

## தோட்டத் தொழிலாளர் சம்பளம் அதிகரிப்பு

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளங்கள் அதிகரிக்கப் படவேண்டும் என்ற கோரிக்கையை ஜனாதிபதி முழுமையாக ஏற்றுக் கொண்டுள்ளார்.

தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள், தொழில் அமைச்சரை கடந்த செவ்வாய்க்கிழமை அன்று அலரி மாளிகைக்கு அழைத்து பேச்சுவார்த்தை நடாத்திய அவர் மலையக தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள அதிகரிப்பு பற்றி நன்கு ஆராய்ந்து சாதகமான முடிவுக்கு வரும்படி தோட்ட முகாமையாளர்களை கேட்டுக் கொண்டுள்ளார்.

## ஒருதொகுதி தபால் பொதிகள் வந்து சேர்ந்தன

யாழ் குடாநாட்டுக்கான உள்ளூர், வெளியூர் 176 தபால் பொதிகள் கொழும்பிலிருந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கப்பலில் நேற்று காங்கேசன் துறை முகத்தை வந்தடைந்தன.

இத்தபால் பொதிகள் நேற்று யாழ் பிரதம தபாலகத்தினரால் எடுத்துவரப் பட்டுள்ளன.

இன்று முதல் இத்தபால் பொதிகள் வழமைபோல் தரம் பிரிக்கப்பட்டு தபால் விநியோக சேவை இடம் பெறுமென்று தபாலக வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

## புதிய திறைசேரி செயலர்

திறைசேரியின் செயலாளராக கடமையாற்றிய பி.ஸி. பெரேரா ஒப்பந்த காலம் முடிவடைந்து தனது பதவியிலிருந்து விலகிக்கொண்டார்.

பல கோடி ரூபா பெறுமானம் உள்ள ரெயில்பெட்டி கேள்விப் பத்திர ஊழல்களிலும் சமீப காலத்தில் இவரது பெயர் சம்பந்தப்பட்டிருந்தது,

சில வாரங்களுக்கு முன்னர் தனக்குக் கீழே வேலை செய்யும் சில உயர் அதிகாரிகளை சந்திரிகா சாடியிருந்தார்.

இவரின் இடத்திற்கு திறைசேரியின் புதிய செயலாளராக டாக்டர் பீ. பி. ஜெயசுந்தர நியமிக்கப்படலாம் எனத் தெரியவருகிறது.

ஜெயசுந்தரவின் சேவையை கடந்த யூ. என். பி. அரசாங்கமும் விரும்பிப் பெற்றுக் கொண்டது.

## நாட்டின் நன்மைகருதி தேசிய அரசாங்கம் அமைக்க

-ஸ்ரீமானி

இன்றைய நிலையில் ஒரு தேசிய அரசாங்கமே நாட்டின் பிரச்சனைகளுக்கு தீர்வாகும் என்று ஸ்ரீமானி அத்துலத் முதலி கருத்து தெரிவித்துள்ளார்.

கட்சி அரசியலைக்கைவிட்டு நாட்டின் நன்மை கருதி எல்லாக் கட்சிகளும் ஒற்றுமைப் பட்டு ஒரு தேசிய அரசாங்கத்தை அமைக்க வேண்டும் என அவர் கூறினார்.

இதன் தலைமைப் பதவி சுழற்சி முறையில் எல்லாக் கட்சியினருக்கும் வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற அவசர காலச்சட்ட நீடிப்பு விவாதத்தின் போது பேசுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## சித்தாந்தப் பண்டிதர் சித்திகள்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை 1997ம் ஆண்டு வைகாசி மாதம் நடாத்திய சித்தாந்தப் பண்டிதர் தேர்வில் சித்தியடைந்தோர் விபரம் பின்வருமாறு:-

செல்வி விமலரஞ்சினி மயில்வாகனம் - இரண்டாம் பிரிவு

செல்வி பரமேஸ்வரிசின்னத்துரை - மூன்றாம் பிரிவு

திருமதி சு. சிவாகரன் - மூன்றாம் பிரிவு.

## பாம்பென்றால் படையும் நடுங்கும்

பாம்பு இனத்தில் மனிதனுக்கு மிகுந்த பயத்தை ஏற்படுத்தும் ஒரு வகையான ''இராஜ நாகம்'' தோற்றத்திலும், செயற்திறனிலும் சிறப்பு வாய்ந்தது. இது பொதுவாக பழுப்பு நிறமும் முதுகிலும் வயிற்றுப் பகுதியிலும் வெண்ணிறக் கோடுகளை கொண்டதாகும். சரர் சரியாக நன்கு வளர்ந்த இப்பாம்பு 18 அடி நீளமானது. தன்னை அண்டி வாழ்கின்ற சில பிராணிகளையும் ஏனைய விஷமுள்ள, விஷமற்ற பாம்புகளையும் ஒரு நொடியில் கொன்று தின்னும். 7அடி நீளமான சாரைப் பாம்பை சில நிமிடங்களில் விழுங்கி ஏப்பமிடும். ஒரு யானையைக் கொல்லக்கூடிய 6சி,சி. அளவு நஞ்சை தனது விஷப்பையில் கொண்டிருப்பது இதன் விஷேட பண்பாகும். இரவு நேரங்களில் மிக நீண்டதூரங்களுக்குச் சென்று வேட்டையாடும். உணவை உட்கொண்ட பின் வாயைத் திறந்து உறுமும்போது புலியின் உறுமல் போல் கேட்பவர்களைக் கிலிகொள்ளச் செய்யும். பரவசமடையும் போது படமெடுத்தாடும் காட்சி ஒரு கண்கொள்ளாக் காட்சியாகும்.

இந்தியாவின் வடபகுதியிலும், அந்தமான் தீவிலும் தென் அமெரிக்கா, தென் ஆபிரிக்கா பிரதேசங்களிலும் இந்தவகை இராஜ நாகம் இனங் காணப்பட்டுள்ளது. நன்கு அடர்ந்த காடுகள் இதன் குடியிருப்பு ஆகும்.

இந்தியாவில் இப்பாம்பினம் தற்போது அருகி வருவதாக வனவிலங்கு அதிகாரிகள் கூறுகின்றனர். சீனர்களுக்கோ வாயில் உமிழ்நீரைச் சுரக்கச் செய்யும் உயர்தர இறைச்சிக்குரிய பாம்பாக இந்த இராஜ நாகம் விளங்குவது குறிப்பிடக் கூடியது.

- கே. ரஞ்சித்

# வவுனியாவில் பொலிசாரின் புதிய தான்தோன்றித்தனமான சட்டங்கள்

(வவுனியா)

வவுனியா நகரப்குதிக்கு வருய மக்கள் தற்போது அப பகுதியில் புதிதாக அமுல் படுத்தப்பட்டுள்ள புதிய நடைமுறை அனுமதிப் பத்திரம் (பாஸ்) பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக செய்திகள் தெரிவிககின்றன

18-01-98க்குப் பின் நகரப் பகுதிக்கு வருவோருக்கு மூன்று நாட்கள் மட்டுமே அனுமதி வழங்கப்படுவதாகவுய இதுகூட பெருஞ் சிரமத்தின் மத்தியிலேயே பெற வேண்டி உளளதாகவும் அறிய முடிகின்றது, 18-01-98க்கு முன் வந்தவர்களுக்குக் கூட அனுபதி மறுக்கப்பட்ட நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் சண்முகநாதன் தலயிட்டு நூற்றுக்கும் மேற்பட்டோருக்கு இவ் அனுமதியைப் பெற்றுககொடுத்துள்ளார்.

இதுவிடயத்தில் பொலிசார் பணம்பெற்றுக்கொண்டு செயல்படுவதாகவும் ஆவணங்கமீளக் கூட கையளித்தும் அனுமதி மறுக்கப்படுவதாகவும் தமது போக்கிலேயே கண்மூடித்தனமாக செயற்பட்டுவருவதாகவும் அரச ஊழியர் பலரும் பொலிசாரை குற்றம் சுமத்துகின்றனர்.

இதுபற்றிக் கருத்துத் தெரிவித்த பொலிஸ் அதிகாரி ஒருவர் நாம் வவுனியா நகரை அகதிகள் நகராக்க விரும்பவில்லை என்றாராம்,

18-01-98க்குப் பின்னுள்ள அனுமதி நடைமுறையின்படி நகருக்கு வருவோர் அனுமதி முடிவடைந்ததும் தாம் எங்கிருந்து வந்தனரோ அதேபகுதிககு சென்றுவிடளேண்டும் என வலியுறுத்தப்படுகின்றனராம் அதாவது வன்னியில் இருந்து வருவோர் மீண்டும் வன்னிக்கே சென்றுவிட வேண்டும் என்ற நிலைமையே இதனமூலம் ஏற்பட்டுள்ளது,

இலங்கையில் வேறு எந்தப் பகுதியிலும் இல்லாத புதிய சட்ட அணுகுமுறைகள் வவுனியா நகரில் பாதுகாப்புப் படையினரால் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன, இதன்மூலம் மக்கள் பெரும் துன்பப்படுவதாகவும் அறிய முடிகின்றது, சிலர் அனுமதி கிடைக்காமல் திரும்பியும் போகின்ற நிலைமை உள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன,

# போலிப்பத்திரங்கள் அம்பலம் முகவர்கள் மீது விசாரணை

ரஷ்யாவுககான விசாக்களை வழங்கிய பிரயாண முகவர்கள் பலரை இரகசியப் பொலிசார்விசாரணைசெய்து வருகின்றனர். ரஷ்யாவுக்கான விசாக்களைப் பெற்றுள்ள பலர் ரஷ்யாவுக்கு அழைத்துச்செல்லப்பட்டு பின்னர் ஜெர்மனி, போலந்து, எலலைப்புறத்தில் கொணடு சென்று விடப்பட்டுள்ளனர்.

அந்த இடத்திலிருந்து மேறகு நாடுகளுக்கு களளத்தனமாக அவர்களைக்கடத்துவதற்கு முகவர்கள் உதவி செய்துள்ளனர்.

ஜொமனிய எல்லைப்புறப் பொலிசார் நூற்றுக்கு மேற்பட்ட இலங்கையரை கைது செய்து அவர்களைவிசாரணை செய்தபோது இந்த மோசடி வெளிப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட இலங்கையர் அனைவரும் நாடுகடத்தப்பட்டு இப்போது இலங்கை பொலிஸ் காவலில்உள்ளனர்.

கொழும்புக்கு அண்மையிலுள்ள, பாடசாலைப்பெயர்களைக்கொண்ட பொய்யான கடிதத் தலைப்புக்களைப் பயன்படுத்தி பொய்ப்பத்திரங்களை தயாரித்து இந்தமுகவர்கள் ரஷய விசாக்களைப்பெற்றுள்ளனர்.

கொழும்பிலுள்ள பிரபலமான ஒரு பிரயாண முகவர் இப்போது பொலிஸாரினால் விசாரிககப்பட்டு வருகிறார். இப்படியான இன்னும் பல முப்வர்களை விசாரிக்க ஆயத்தம் செய்துவருகின்றார்கள்,

## கோழிக்கு தூக்கநோய்

யாழ. மாவடடத்தின் பல இடங்களிலும் கோழிகளுக்கு தூக்கநோய ஏற்பட்டுளளது. இதன் மூலம் பல கோழிகள் இறந்துவிட்டன.

## செயலக...

இயங்கத தொடங்கியுள்ளன. ஆனால் யாழ். செயலக தொலைபேசி மட்டும் இன்னமும இயங்காமலேயே உளளது.

வர்த்தவகர்களினதும், வர்த்தக துறைசார்ந்தவர்களினதும் தொலைபேசிகள் யாவும் இயங்கத் தொடங்கிய போதும் யாழ். செயலக தொலைபேசி இயங்காதது தமக்கு வியப்பாக உளளதாகவும் யாழ். மாவட்ட மக்களின் நலனைக்காக செயற்படும் யாழ். செயலக தொலைபேசியை இயங்கவைக்க தாம் ''ரெலிக்கம்'' நிறுவனதுக்குத்தேவையான வசதிகளை செய்ய தயாராக இருப்பதாகவும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை கொழும்பில் இருந்து வரும் அழைப்புக்களை மட்டுமே தமது தொலைபேசி நேற்று மாலையில் இருந்து தருவதாகவும் இங்கிருந்து அழைபபுக்களை பெறமுடியாது உளளதாகவும் அவர் தெரிவித்தார்.

## தமிழ்....

படடனர்.

புளொட் உறுப்பினர்கள் பினனர் ஆஸ்பத்திரி வீதியில் ஆயுதங்களுடன் காணம்பட்ட ஈபிடி உறுப்பினர்கள் ஸ்ரான்லி வீதியில் உள்ள அவர்களது அலுவலகத்துக்கு முன்னாலும், மத்திய பஸ் நிலையத்திலும் ஆயுதங்களுடன் காணபபட்டனர்

புளொட் உறுப்பினரகள் ரெலிகொம் நிறுவனத்தடியிலும ஆஸ்பத்திா வீதியில் பழைய ஓபிடிகேற்றுக்கு முனபாகவும் ஆயுதங்களுடன் நின்றனர்

காயமடைந்த ஈபிடிபி உறுப்பினர்கள் ஆஸ்பத்திரி வீதி இலங்கை வங்கி சந்தியிலிருநது இராணுவத்தின் உதவியுடன் ஆஸ்பத்திரியை வநதடைந்தனர்

# மஹாஜனா யூனியன் மாணவர் எதிர்காலம்

தெல்லிப்பழை மாணவர்களின் நன்மை கருதியும் எதிர்காலம் கருதியும் மஹாஜனாக் கல்லூரி மற்றும யூனியன் கல்லூரி இரண்டினையும் ஜனவரி மாதம் தொடக்கம் பாடசாலை இயங்கக் கூடியவாறு திறந்து விடப்படும் என பாதுகாப்புப் படையினர் ஏற்கனவே அறிவித்திருந்தனர்.

இன்றுவரை இப் பாடசாலைகளை திறந்து விடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தகவல் ஏதுமில்லை. மார்ச் மாதம் தொடங்குவதற்கு இன்னும் சில நாடகளே உளளன. இனியாவது இதற்கு ஏற்ற நடவடிக்கையைச் சம்பந்தப்பட்டதரப்பினர் எடுப்பார்களா என்ற ஆதங்கத்துடன் தெல்லிப்பழை மக்கள காத்திருககின்றனர்,

## யுனிசெப் உதவியுடன் சுகாதார ஊழியர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள்

யாழ மாநகர சபையின் சுகாதாரப் பகுதியில் பணிபுரியும் வெளிக்கள ஊழியர்களுக்கு யுனிசெவ் நிறுவனத்தினால எதிர் வரும் சனிக்கிழமை பதின்நான்கு துவிச்சக்கர வண்டிகள வழங்கப்படவுள்ளது.

இதற்கு வெளிக்கள ஊழியர்களில் ஒருபகுதியினருக்கு யுனிசெவ் நிறுவனம் துவிச்சக்கர வண்டிகளை வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது

# யாழ். மத்தியின் மாணவன் கிணற்றுக்குள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரியில் கல்வி டயிலும் மாணவர் ஒருவர் சகமாணவன் தளளிவிட்டதினால் பாடசாலை மத்தியில இருக்கும் கிணற்றில் விழுந்து விட்டார்.

இதனைக் கண்ட க. பொ. த. உயர்தரவகுப்பு மாணவர் ஒருவர் உடன் கிணற்றில் குதித்து அம்மாணவனை காப்பாற்றினார். இத்துணிகரச் செயலினால் உயர்தர வகுப்பு மாணவர் பாராட்டப் பெற்றார்.

இதேவேளை இப்பாடசாலை கிணறு சென்றகாலங்களில் மூடிக்கிடந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. தற்போது மூடியகிணற்றை திறந்துவைத்திருப்பது குறித்து பெற்றோர் விசனம் தெரிவித்துளளனர்.

# மத்திய சென்னையில் தேர்தல் விறுவிறுப்பு

தமிழகத்தில் நடைபெறும் மக்களவைத் தேர்தலில் மத்திய சென்னைப் பகுதியில் தேர்தல் பிரச்சாரங்கள் மிகப் பெரிய அளவில் சூடு பிடித்துளளது

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தொழில் அமைச்சர் முரசொலிமாறனும் அதிமுக சார்பில் முன்னாள் அமைச்சர் வி. ஜெயக்குமாரும் காங்கிரசின் சார்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இரா அன்பரசும் போட்டியிடுகின்றனர்

சுமார் பன்னிரெண்டு இலட்சம் வாக்காளர்களைக் கொண்ட இத் தொகுதிக்குள் எழும்பூர், ஆயீரம் விளக்கு, அண்ணாநகர், பூங்கா நகர் ஆகிய சட்டப் பேரவைகள் அடங்குகின்றனர்,

# சமாதான யாத்திரை பக்கசார்பற்றது

சர்வதேச சமாதான ஊர்வலம் தலதாமாளிகை மீது மேற்கொள்ளப்பட்ட குண்டு தாக்குதலினால் நடக்கவில்லையென அதிவணக்கத்திற்குரிய பிதா பிரிதியூசுப் தெரிவித்துள்ளார்

எமது பயணம் கடந்தசெப்ரெம்பர் மாதத்திலிருந்தே திட்டமிடப்பட்டிருந்தது ஆனால் இங்கு இருக்கும் யாத்திரிகர்கள நாம் தலதாமாளிகைத் தாக்குதலினால்த்தான் ஊர்வலம் நடத்த வந்ததாகத் தெரிவிக்கின்றார்கள்

தலதா மாளிகையில் குண்டு வெடிக்க முன்பே இந்தியாவிலுள்ள புத்த காயாவிலிருந்து சமாதன யாத்திரையை நாம் ஆரம்பித்திருந்தோம் எனவே எமது சமாதான யாத்திரையைத் தலதா மாளிகையுடன் தொடர்புபடுத்திக் கூறுவது மிகவும் தவறானதாகும் எனவும் பிரிதியூசுப் தெரிவித்துள்ளார்.

# சிவராத்திரி தினத்தில் கீரிமலையில் பூசை

கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்தில் எதிர் வரும் சிவராத்திரி தினத்தில் விஷேட பூசை நடைபெற படையினர் அனுமதித்துளளதாகவும், மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்கள் செல்லக் கூடியதாக இருக்கும் என யாழ் மாநகர சபை சைவவிவகார குழு மூலம் தெரியவந்துள்ளது.

தற்பொழுது மேற்படி ஆலயத்தை பிரதம குரு தலைமையில் பத்துப்பேர் சென்று பற்றைகளை துப்பரவு செய்து வருகின்றனர். நடைபெற்ற இராணுவ நடவடிக்கையினால் பலத்த சேதத்தை தாங்கி இக்கோயில் நிற்பது குறிப்பிடத்தக்கது.

# அதிகாரிகளின் அசமந்தம் ஓய்வூதியர்கள் திண்டாட்டம்

யாழ். மாவட்டத்தில் இருந்து பிற மாவட்டத்தில் தமது ஓய்வூதியத்தை இடமாற்றும் ஓய்வூதியர்கள் பல சிரமத்திற்கும் காலதாமதத்திற்கும் உளளாகின்றனர்

அவர்கள் தாம் ஓய்வூதியத்தை இடமாற்றம் செய்தது தொடர்பாக பிரதேச செயலகங்களுக்கு அறிவித்தாலும் சில பிரதேச செயலக அதிகாரிகளின் கவலையீனத்தால் உரிய முறையில் அதை பூரணப்படுத்தாமல் கொழும்பில் இயங்கும் யாழ் செயலகத்தின் இணைப்பாளர் அலுவலகத்திற்குஅனுப்பப்படுகின்றது

இவ்வாறு அனுப்பப்படும் உரியமுறையில்நிரப்பப்படாத ஓய்வூதிய கோவைகளை பூரணப்படுத்துவதற்கு மீண்டும் யாழ்-கொழும்பு தபால் தொடர்புகளை பலமுறை ஏற்படுத்தவேண்டி இருக்கின்றது

# ஐ.தே.க - மு. காங்கிரஸ் மலருமபுதிய உறவு

களுத்துறை மாவட்ட எம்பியான மகிந்த சமரசிங்காவின் உதவியால் முஸ்லீம் காங்கிரஸ் பிரமுகர்களும், ஐக்கிய தேசியக் கட்சிப் பெருந்தலைவர்களும் சிந்தித்துப் பேசியிருக்கிறார்கள

முஸ்லிம் காங்கிரசைச் சேர்ந்த ராவ்ஹக்கீம், சுஹைர், மசூர்மௌலானா ஆகியோர் புடைசூழ முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் ஐக்கிய தேசியக்கட்சித் தலைவரான ரணில் விக்சிரமசிங்காவை அவரது கேம்பிரிஜ் பிளேஸ் இல்லத்தில் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள்,

இச்சந்திப்பின் போது ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த றொனிடிமெல்' ஏ சி எஸ் ஹமீட், உடன் இருந்தனர்

ஐக்கிய தேசியக்கட்சியின் புதிய தீர்வு போசனைகளைப் பரிசீலிப்பதற்காக இக் கூட்டம் கூட்டப்பட்டதெனக் கூறப்பட்டபோதிலும் மந்திரி அஷ்ரப் தனது குறைந்துவரும் செல்வாக்கை அரசாங்கத்தில் அதிகரிப்பதற்காகவே இச் சம்பவத்தைப் பயன்படுத்தியிருக்கிறார் என்று பல கொழும்பு ஆங்கிலப் பத்திரிகைகள அபிப்பிராயம் தெரிவித்திருக்கின்றன

# ஆணையாளர் பாலசிங்கம் கொழும்பு பயணம

யாழ் பொதுசன நூலக அபிவிருத்தி தொடர்பான நூலக ஆலோசனைக் குழுக் கூட்டமொன்று வெளிவிவகார அமைச்சரும் குழு அங்கத்தவருமான லக்ஸ்மன் கதிர்காமர் தலைமையில் நாளை கொழும்பில் நடைபெறவுள்ளது,

இவ்வாலோசனைக் கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு கிடைக்கப்பெற்ற விசேட பணிப்பையடுத்து யாழ் மாநகரசபை ஆணையாளர் வே பொ பாலசிங்கம் இன்று கொழும்பு புறப்பட்டுச் செல்கின்றார் என மாநகரசபை வட்டாரங்ஙள் தெரிவிக்கின்றன, (டா)

'' சூரிய காந்தி' [illegible] 1998ம் ஆண்டு பெப்ரவர் 12ம் தேதி 68, ராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம்
என்ற முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. ஆசிரியர்: க. குமாரசாமி.